# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATTUR.

## M.C. No.11 /2024.

1. Deposition of Witness for : PW1(LW1)
2. Name : KALPANA
3. Father's Name : சங்கர் (கணவர் பெயர்)
4. Village : அச்சமங்களம்
5. Taluk : திருப்பத்தூர்
6. Caste :
7. Calling :
8. Religion : இந்து
9. Age : 43

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06**.11.2024.**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:—**

1. நான் இந்த வழக்கை ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்துள்ளேன். இதற்கு முன்பாக இதுபோல் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு எண் நினைவில்லை. எனக்கு 10.09.2000 வருடம் திருமணம் நடைபெற்றது. நான் முழுமனதுடன் தான் பெரியவர்கள் சம்மதத்துடன் தான் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். எனக்கு 2 குழந்தைகள் பவித்ரா மற்றும் எழிலரசி ஆகும். பெரிய மகள் B.sc Computer Science. சிறிய மகள் B.sc Biology.

அவர்களுக்கு வயது 23 மற்றும் 20 ஆகும். நிருபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்துள்ளேன். இரண்டு குழந்தைகளும் என் கணவருடன் தான் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். அவர் தான் அனைத்து செலவுகளையும் பார்த்து வருகிறார் என்றால் சரிதான். உங்கள் கணவரின் பெற்றோர்களும் உயிரோடு தான் இருக்கிறார்கள். அவர்களையும் உங்கள் கணவர் தான் பார்த்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

2. உங்கள் கணவர் அவர்கள் திருப்பத்தூரில் உள்ள கார்மெண்ட்ஸில் தான் பணியாற்றி வருகிறார் என்றால் இல்லை. உங்கள் குழந்தைகளுக்கு எதிரி மனுதாரர் தான் அனைத்து செலவுகளும் செய்து வருகிறார் என்றும் நீங்கள் சென்று பார்த்து வரவில்லை என்றும் அவர்களுடன் பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் குழந்தைகள் B.sc Computer Science மற்றும் B.sc Chemistry படித்து வருகிறார்கள் என்ற விவரம் கூட தங்களுக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல., உங்கள் கணவருடன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்து வந்தீர்கள் என்று சொன்னால் 23 ஆண்டுகள் வாழ்ந்து வந்தேன். அப்போது அனைத்து செலவுகளையும் என் கணவர் தான் செய்து வந்தார் என்றால் சரிதான்.

3. உங்கள் கணவர் கூலி வேலை செய்து வருகிறார் என்று சொன்னால் அவர் நிலத்தில் வேலை செய்து வருகிறார். உங்கள் கணவர் நிலம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவருக்கு ரூ.7,00,000/- கடன் இருந்தது என்று சொன்னால் எனக்கு தெரிந்த வரையில் இல்லை. உங்கள் குழந்தையை படிக்க வைக்க அவருக்கு ரூ,5,00,000/- செலவு ஆகியுள்ளது என்று சொன்னால் செலவு ஆகியுள்ளது ஆனால் எவ்வளவு ரூபாய் என்று தெரியாது. நான் தற்போது அச்சமங்களத்தில் எனது தாயார்

வீட்டில் வசித்து வருகிறேன். அங்கு எனது தம்பி மற்றும் எனது மூத்த சகோதரருடன் வசித்து வருகிறேன். உங்களுக்கு அங்கு பரம்பரை சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது சகோதரரர் திருமணம் நடைபெற்று அவர் தனியாக வசித்து வருகிறார். உங்கள் சகோதரர் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

4. உங்கள் தாயார் அவர்கள் நல்ல வருமானத்தில் உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் தேவைகள் அனைத்தும் உங்கள் தாயார் வீட்டின் வருமானத்தின் மூலமாகவே பூர்த்தி செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரிதான். நான் தற்போது எங்கேயும் வேலைக்கு செல்லவில்லை. எனது முதல் விசாரணையில் நான் கார்மெண்ட்ஸில் வேலை செய்வதாகவும் அதில் ரூ.25,000/- வருமானம் வருவதாகவும் கூறியிருந்தால் தவறு என்று சொன்னால் சரிதான். மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர் 1-ல் MC.No.17/2020 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் சமாதானம் ஏற்பட்டு கணவருடன் சென்று வாழ்ந்து வந்தீர்கள் என்று சொன்னால் சரிதான். அப்போது உங்கள் கணவர் தான் அனைத்து செலவுகளையும் செய்தார் என்று சொன்னால் சரிதான்.

5. இப்போதும் உங்கள் கணவர் அழைத்து செல்ல தயாராக இருக்கிறார்கள் என்றும் நீங்கள் தான் அவருடன் செல்ல தயாராக இல்லை என்று சொன்னால் சரிதான். கடந்த 2 வருடங்களாக நான் என் தாயார் வீட்டில் தான் வசித்து வருகிறேன். உங்கள் தாயார் வீட்டிற்கு செல்லும்போது அனைத்து நகைகளையும் எடுத்து சென்றுவிட்டீர்கள் என்றும் தற்போது நீங்கள் நல்ல நிலைமையில் இருப்பதால் உங்களுக்கு எவ்வித ஜீவனாம்சமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாயார் வீட்டில் நல்ல வசரி

**இருப்பதால் உங்கள் கணவரிடம்  ஜீவனாம்சம் தொகை பெறவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரிதான்.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

Sd/-J.Omprakash

Chief Judicial Magistrate,
Tirupathur.